1982 ஏப்ரல் 5]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டம் முன்வடிவு எண் 27/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

7. அரசினர் தீர்மானம்

விதி 30- ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30 (3)-ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்பதன் கீழ் வரிசை எண் (v)-ல் உள்ள தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1980) (ஆய்வுக்குழு திருத்தி அமைத்தவாறு) என்பதைத் தள்ளி வைத்து விட்டு அடுத்து இனம் உள்ள 5-ல் நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதம் என்பதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

ஒரு மணி நேர விவாதம்.

சேது சமுத்திர திட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதம். திரு. செ. சிவசாமி விவாதத்தைத் துவக்கி வைப்பார்கள்.

திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே. கீழ்க்கண்ட நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென மொழிகிறேன்:

''சேது சமுத்திரத் திட்டத்தை மீண்டும் அமுல் நடத்த அண்மையில் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளதாலும், தமிழ்நாடு பொருளாதார ரீதியில் நன்மை அடைவதாலும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கக் கூடியதாக இருப்பதாலும், கடலோர நீர்ப்போக்குவரத்து அதிகரிக்க சந்தர்ப்பமிருப்பதாலும், பெருங்கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக் கொண்டு வராமல் குறுக்கு வழியில் வருவதால் சிக்கனம் ஏற்படுவதாலும் மேற்படித் திட்டம் உடனடியாக எடுத்துக் கொள்ளப் வேண்டும்''.